### ஆதிதிராவிடர் பழங்குடி இன மக்களுக்கு

# தி.மு.க. ஆட்சி காலத்தில் தான் பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டது!

## சட்டப்பேரவையில் எதிர்க்கட்சி துணைத் தலைவர் கே.என்.நேரு பேச்சு!

சென்னை, ஆக.28-

ஆதிதிராவிடர் பழங்குடி இன மக்களுக்கு தி.மு.க. ஆட்சி காலத்தில் தான் பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டது என்று- பேரவையில் சமூக நீதித்துறை மானிய கோரிக்கை விவாதத்தில் எதிர்க்கட்சி துணைத் தலைவர் கே.என்.நேரு குறிப்பிட்டார்.



சட்டமன்றத்தில் நேற்று சமூக நீதித்துறை மானிய கோரிக்கை மீது விவாதம் நடைபெற்றது , இதில் சார்பில் கே.என். நேரு அவர்கள் பங்கேற்று பேசியதாவது:-

இங்கு பேசிய அமைச்சர் நீண்ட நெடிய சொற்பொழிவுவை யாற்றி அமர்ந்துள்ளார் .

சமூக நீதித்துறையில் ஒரு குறிப்பிட்ட பணம் செலவு செய்ய வில்லை என்று சிஏஜி அறிக்கையை குறிப்பிட்டு காட்டுகிறார், எந்த ஒரு அரசாக இருந்தாலும் , எந்த ஒரு துறையாக இருந்தாலும், ஒரு குறிப்பிட்ட அளவு நிதி ஒதுக்கும்போது, அதற்கு நிர்வாக ரீதியாக சில சங்கடங்கள் இருக்கும், ஒரு சில நேரங்களில் நீதிமன்றத்தில் தடையாணை பெறுவார்கள் , அதுபோன்ற நேரங்களில் அந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதி செலவு செய்யாமல் நின்று விடும், அடுத்த ஆண்டு அது தொடரும், இது நடைமுறை,

எனவே சிஏஜி அறிக்கையை ஒரு எச்சரிக்கையாக எடுத்துக் கொள்ளலாமே தவிர, பணிகளை கைவிட்டு விட்டோம் என்று அர்த்தம் கிடையாது, ஆதிதிராவிட மக்களுக்கு செய்யக்கூடிய பணிகளை செய்யாமல் விட்டு விட்டோம் என்று அர்த்தம் அல்ல, ,

எங்களுக்கெல்லாம் ஒரு பெருமை என்னவென்றால் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் காலந்தொட்டு கடந்த திராவிட மாடல் ஆட்சியின் இறுதி வரை பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களின் முன்னேற்றத்திற்கு எண்ணற்ற நன்மைகளை செய்துள்ளோம், குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால், ஆதிதிராவிடர் மற்றும் பிற்பட்டோர் நலத்துறையை உருவாக்கியதே திமுக தான், அது மட்டுமல்ல கடந்த ஆட்சி காலத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனத்தைச் சேர்ந்த ஐந்து நபர்களை அமைச்சர்ககளாக நியமிக்கப்பட்டார்கள், குறிப்பாக உயர் கல்வித் துறைக்கு ஆதிதிராவிடர் ஒருவரை அமைச்சராக நியமித்தது திமுக தான்.

நீங்கள் ஆட்சிக்கு வந்து மூன்று மாதங்கள் தான் ஆகிறது, இந்த ஆட்சி ஓராண்டு நீடித்தால் ( ஒரே கூச்சல் குழப்பம்) , அதாவது ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் ஒன்றிய அரசாங்கம் சிஏஜி அறிக்கை சமர்ப்பிப்பார்கள், அப்பொழுது தெரியும் எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டது, எவ்வளவு செலவு எவ்வளவு செலவு செய்யவில்லை என்று தெளிவாக தெரிந்து விடும்.

இந்த அவையில் ஆரோக்கியமான விவாதத்தை விட்டு விட்டு, உங்கள் ஆட்சியில் இது செய்யவில்லை, சிஏஜி-யில் குறை உள்ளது என்று திசை திருப்புகிறீர்கள், இது தவறான பாதைக்கு வழி வகுக்கிறது என்பதை இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

### எண்ணூர் அன்னை சிவகாமி நகரில்

# தி.மு.க. ஆட்சியில் திறக்கப்பட்ட படகு குழாம் திடீர் மூடல்!

## பொதுமக்கள் ஏமாற்றம்!

திருவொற்றியூர், ஆக.28-

சென்னை திருவொற்றியூர் மண்டலம் 3வது வார்டு, எண்ணூர் அன்னை சிவகாமி நகரில் ரயில்வே துறைக்கு சொந்தமான மழைநீர் சேமிப்பு குளம் உள்ளது. இந்த குளத்தில் சென்னை மாநகராட்சி, திருவொற்றியூர் மண்டலம் சார்பில், ரூ4.62 கோடி செலவில் சுற்றுச் சுவர், நடைபாதை, உணவகம் மற்றும் சிறுவர்களுக்கான விளையாட்டு பூங்கா ஆகியவைகளுடன் படகு குழாம் அமைக்கப்பட்டு கடந்த மார்ச் 1ம்தேதி பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டது. தமிழ்நாடு சுற்றுலாத் துறை பராமரித்து வருகிறது.

இந்த நிலையில், கடந்த மே மாதம் கடுமையான வெயில் காரணமாக குளத்தின் தண்ணீர் வற்றி மணல் திட்டுகள் தெரிய ஆரம்பித்தது. இதன்காரணமாக குளத்தில் படகை இயக்க முடியாததால் கடந்த 3 மாதங்கள் மட்டுமே செயல்பட்டுவந்த படகு குழாம் தற்போது மூடப்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் கடும் ஏமாற்றம் அடைந்துள்ளனர். இந்த நிலையில், ஏரியை தூர்வாரி மழை நீர் சேமிக்கவும் தற்காலிகமாக நிலத்தடி நீரை மோட்டார்கள் மூலம் உறிஞ்சி ஏரியில் நிரப்பவும் சென்னை மாநகராட்சி திட்டமிடப்பட்டது. ஆனால் பணி கிடப்பில் போடப்பட்டு உள்ளது. இதனால் மக்கள் வரிப்பணத்தில் கட்டப்பட்டுள்ள படகு குழாம் மற்றும் படகுகள், பொழுதுபோக்கு அம்சங்கள் அனைத்தும் பாழாகி வருகிறது.

சமூக ஆர்வலர்கள் கூறுகையில், "இந்த ஏரியில் சென்னை மாநகராட்சி அதிகாரிகள் படகு குழாம் திட்டத்தை செயல்படுத்த எப்படி தீர்மானித்தார்கள் என்று தெரியவில்லை. ஆய்வு மேற்கொள்ளாமல் அவசரகதியில் திட்டத்தை செயல்படுத்தியதால் சுமார் 4.50 கோடி ரூபாய் மக்கள் வரிப்பணம் வீணாகி விட்டது. தி.மு.க. ஆட்சியில் கொண்டுவரப்பட்ட திட்டம் என்பதாலேயே தூர்வாரும் பணியை மேற்கொள்ளஅதிகாரிகள் ஆர்வம் காட்டுவதில்லை. இந்த ஏரியின் கட்டமைப்பு பணிகளை மேற்கொண்ட கான்ட்ராக்டர்களுக்கு சுமார் 20 சதவீதம் வரை பணம் தராமல் இழுத்தடிக்கின்றனர். இனியாவது மக்களுக்கு பயன்படக்கூடிய நிரந்தரமான திட்டத்தை செயல்படுத்த அரசு முன்வர வேண்டும்" என்றனர்.

### பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி குரோம்பேட்டையிலிருந்து

# நேபாளம் வெள்ளத்தில் சிக்கிய 7 பேர் குடும்பத்தினருக்கு பல்லாவரம் இ. கருணாநிதி நேரில் ஆறுதல் கூறி விவரம் கேட்டறிந்தார்!

சென்னை, ஆக.28-

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி குரோம்பேட்டையில் இருந்து தனியார் ஆன்மிக சுற்றுலா ட்ராவல்ஸ் மூலம் ஆன்மீகச் சுற்றுலா சென்ற 49 பேரில் ஏழு பேர் குரோம்பேட்டை பகுதியைச் சேர்ந்தவர்கள் அவர்களின் நிலைமை என்னவென்று தெரியவில்லை என தொலைக்காட்சியில் செய்தி பரவியதை தொடர்ந்து தகவல் அறிந்து மாவட்ட கழகத் துணைச் செயலாளர் பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியின் முன்னாள் உறுப்பினர் இ. கருணாநிதி முன்னாள் நகர மன்ற உறுப்பினராக இருந்த குரோம்பேட்டை ஜமீன் ராயப்பேட்டை சேர்ந்த குமார் அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த அவரது மனைவி அமுதா மகன் கிஷோர் உறவினர்கள் ராஜலட்சுமி ஆதி லக்ஷ்மி வேள வேந்தர் மஞ்சுளா விக்கிரமன் சுற்றுலா நிறுவனத்தின் உரிமையாளர் சத்யன் நாராயணன் உட்பட ஏழு பேர் அந்த சுற்றுலா நிறுவனத்தின் மூலம் நேபாளம் சென்றிருந்ததாகவும் அவர்களின் நிலைமை என்னவென்று தெரியாத இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தார்கள்.

அதைத் தொடர்ந்து குமார் அவர்கள் இல்லத்திற்கு நேரில் சென்று அவர்கள் குடும்பத்தினரை சந்தித்து தங்கள் மகன் கடைசியாக எப்பொழுது தொடர்பு கொண்டார் என்பதை கேட்டு அறிந்து அவர் நேபாள விமான நிலையத்தில் வந்திருப்பதாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட அன்று காலை தொலைபேசி மூலம் எனக்கு தொடர்பு கொண்டார் அதற்குப் பிறகு அவரிடம் இருந்து எந்த தொடர்பும் இல்லை என தெரிவித்தார் அதைத்தொடர்ந்து இ. கருணாநிதி அவர்கள் சென்னை விமான நிலைய அதிகாரிகளை தொடர்பு கொண்டு நேபாள விமான நிலையத்தில் இந்த முகவரியை கொண்டவர்கள் இந்தப் புகைப்படத்தில் உள்ளவர்கள்யாராவது இருக்கிறார்களா என கேட்டு தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

அதை தொடர்ந்து விமான நிலைய அதிகாரிகளுக்கு அவர்களைக் குறித்த தகவல்களை அனுப்பினார் அதிகாரிகள் மேல் அதிகாரிகளை தொடர்பு கொண்டு கேட்டு தங்களுக்கு தெரிவிப்பதாக கூறினார்கள்.

மேலும் எந்தவித உதவிகள் தேவைப்பட்டாலும் தன்னை தொடர்பு கொள்ளுமாறு அவர்களிடம் கூறி மிக விரைவில் அவர்கள் நல்ல நிலைமையில் தங்கள் இல்லங்களுக்கு வருவார்கள் என்று ஆறுதல் கூறினார் அப்பொழுது மாவட்ட கழக பிரதிநிதி க. ரமேஷ் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கோ. ஜானகிராமன் மாமன்ற உறுப்பினர் ஆண்டாள் கண்ணன் பகுதி துணைச் செயலாளர் கே. பூபதி பகுதி தொண்டரணி அமைப்பாளர் ஜெயபால் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



நேபாள பெருவெள்ளத்தில் சிக்கிய பல்லாவரம் குரோம்பேட்டையைச் சார்ந்த முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் குமார் அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த ஏழு பேர் நிலைமை குறித்து அவர்களின் இல்லத்திற்கு மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் பல்லாவரம் தொகுதியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி நேரில் சென்று அவரை சந்தித்து பேசினார். மாவட்டக் கழக பிரதிநிதி க. ரமேஷ், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கோ. ஜானகிராமன், மாமன்ற உறுப்பினர் ஆண்டாள், என். கண்ணன், பகுதி கழகத் துணைச் செயலாளர் கே. பூபதி, பகுதி தொண்டரணி அமைப்பாளர் ஜெயபால் வட்டக் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.

### மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் தலைமையில்

# புதுமாவிலங்கை முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் இ.பாண்டியன்- பா.தனலட்சுமி இல்ல திருமண விழா!

## முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் – வி.ஜி.ராஜேந்திரன்- ஆ.கிருஷ்ணசாமி மணமக்களை வாழ்த்துகிறார்கள்!

திருவள்ளூர், ஆக.28-

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் கடம்பத்தூர் மத்திய ஒன்றியம், புதுமாவிலங்கை முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் இ.பாண்டியன் - பா.தனலட்சுமி ஆகியோரின் இல்ல திருமண விழா, வருகிற 30-ந்தேதி (ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணிக்கு வரவேற்பு நிகழ்ச்சியுடனும், 31-ந்தேதி (திங்கட்கிழமை) காலை 6 மணி முதல் 7.30 மணி வரை மண நாள் விழாவுடனும் நடைபெறுகிறது.



திருமண விழாவுக்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் தலைமை தாங்குகிறார். மாவட்ட அமைப்பாளர் கே.திராவிட பக்தன், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் ஆர்.டி.இ.ஆதிசேஷன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். கடம்பத்தூர் மத்திய ஒன்றிய பொறுப்பாளர் பிரகாஷ் ஞானஒளி வரவேற்புரையாற்றுகிறார்.

விழாவில் முன்னாள் அமைச்சர் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு. நாசர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வி. ஜி.ராஜேந்திரன், ஆ.கிருஷ்ணசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி ஆகியோர் கலந்து கொண்டு மணமக்கள் பா.ஸ்ரீலேகா - யு.பாலாஜி ஆகியோரை வாழ்த்துகின்றனர்.

இதில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், இ.குருதாஸ், சி.ஜெயபாரதி, பா. உதயமாலர் பாண்டியன், ப.சிட்டிபாபு, எஸ். கே.ஆதம், டி.என்.சந்திரகுமார், சி.ரவிச்சந்திரன், க.அரிகிருஷ்ணன், மோ.ரமேஷ், சி.சு.ரவிச்சந்திரன், எஸ்.மகாலிங்கம், கூளூர் எம்.ராஜேந்திரன், தா.மோதிலால், பச.கமலேஷ், ஆர்.ஜெயசீலன் , மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் ம.கிரண், சரஸ்வதி சந்திரசேகர், பி. கே.நாகராஜ், கே.ஏ.மதியழகன், ஜி.கோவிந்தராஜன், எம்.பன்னீர்செல்வம், என். நந்தகோபால், ஜி.தினேஷ், என்.பிரசன்னகுமார், எம். சேகர், ஆர்.வாசு, ஏ.எஸ். மணி, கே.பி.தமிழ்ச்செல்வன், ஏ.பெருமாள், மாலதி வாசன், மா.கோபிநாத், பி.ஆர்.பிரபாகரன், எஸ். பாலசுப்பிரமணி, ஆர். ராஜேந்திரகுமார், சதீஷ்குமார், துரை, ஆர்.மணிகண்டன், சி.காமராஜ், எம்.சங்கர், டாக்டர் முரளி, ஆர். நிலாவதி, கடம்பத்தூர் மத்திய ஒன்றிய கழக நிர்வாகிகள் வி.ராஜசேகர், ரவிக்குமார், மெய்யழகன், ஜெகதாம்பாள், மந்தவெளியான் உள்ளிட்டோரும் விழாவில் பங்கேற்கின்றனர். மாவட்ட முரசொலி நிருபர் இரா.அண்ணாதுரை உட்பட ஏராளமான கழக நிர்வாகிகள், இந்நாள் மற்றும் முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகமூத்த முன்னோடிகள் பெருந்திரளாக கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர். நிகழ்ச்சியின் நிறைவில் முன்னாள் ஒன்றிய துணைச் செயலாளர் மா.நா.குமார் மற்றும் கடம்பத்தூர் மேற்கு ஒன்றிய பொருளாளர் ஏ.தேவா, நிர்வாகி கே.கதிரவன் ஆகியோர் நன்றி உரையாற்றுகின்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# அன்பில் பொய்யாமொழி

**ஆகஸ்ட் 28 (1999)**



திராவிட இயக்க முன்னணித் தலைவர்களில் ஒருவரான அன்பில் தர்மலிங்கம் அவர்களின் புதல்வர்.

தி.மு.க. இளைஞர் அணி தொடங்கப்பட்ட நாளிலிருந்தே அதன் வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருந்தவர்.

1989–91 மற்றும் 1996–99ஆம் ஆண்டுகளில் சட்டப் பேரவை உறுப்பினராகப் பணியாற்றியவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

### தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்

# தொ.மு.ச. வேலூர் மண்டல மத்திய சங்க நிர்வாகிகள்!

## தொ.மு.ச. பேரவை அறிவிப்பு!

தொ.மு.ச. பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக தொ.மு.ச. வேலூர் மண்டலத்தின் (பதிவு எண். 820/NAT, பேரவை இணைப்பு எண். 405) மத்திய சங்க நிர்வாகிகள் தேர்தல் 25.08.2026 அன்று பேரவைச் செயலாளர் சோம.அழகிரி அவர்களை ஆணையாளராகக் கொண்டு நடைபெற்றது. அதில் மத்திய சங்க நிர்வாகிகளாக கீழ்க்கண்டவர்கள் வெற்றிபெற்றுள்ளனர்.

**மத்திய சங்க நிர்வாகிகள்**

| | |
|---|---|
| தலைவர் | ஜெ. கோகுலகிருஷ்ணன் ( பணி எண் 70791) |
| துணைத் தலைவர்கள் | 1) எம். ஏழுமலை (பணி எண் 41425) |
| | 2) வி. பழனிசாமி (பணி எண் 41428) |
| | 3) டி. டீகாராமன் (பணி எண் 71181) |
| பொதுச்செயலாளர் | வி. சுப்பிரமணி (பணி எண் 41209) |
| இணைப்பொதுச் செயலாளர்கள் | 1)வி. சரவணகுமார் (பணி எண் 70494), |
| | 2)பி. செல்வம் (பணி எண் 42224), |
| | 3) வி. விநாயகம் (பணி எண் 71360) |
| அமைப்புச் செயலாளர் | ஜி. சுரேஷ்குமார் (பணி எண் 71218) |
| பிரச்சார செயலாளர் | கே. ரஜினிகாந்த் (பணி எண் 30304) |
| இணைச் செயலாளர்கள் | 1)ஆர். கார்த்தி (பணி எண் 72038), |
| | 2) எம். கோவிந்தராஜி (பணி எண் 41264), |
| | 3) சி. கோபிநாதன் (பணி எண் 41851), |
| | 4) எம்.முகிலன் (பணி எண் 71688), |
| | 5) சி.நரசிம்மன் (பணி எண் 72082), |
| | 6) கே.பெருமாள் (பணி எண் 41627), |
| | 7) எஸ்.புகழேந்தி (பணி எண் 71581) |
| பொருளாளர் | பி. பாபு (பணி எண் 70935) |

இடம்: கலைஞரகம்
நாள்: 25.08.2026

**(மு.சண்முகம், Ex.MP)**
பொதுச்செயலாளர்
தொ.மு.ச. பேரவை

## 33 ஆம் ஆண்டு நினைவு நாள்



காஞ்சிபுரம் **கே.டி.எஸ்.மணி**

மறைவு – 28.8.1993

★★★

இறுதி மூச்சு உள்ள வரை
**பெரியார், அண்ணா, கலைஞர்**
வழி நின்ற சுயமரியாதைச் சிங்கம்!
தம் உடலைத் தானம் செய்து
புகழுலகின் உச்சிக்கே சென்றுவிட்ட உத்தமர்!

**அ.இராமமூர்த்தி – இரா.அருளரசன்**
உறவினர்கள், நண்பர்கள்.

(விம்)